# பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

**வலு**

1987 இன் பெரும் பகுதியில் நிலவிய நீண்ட கடுமையான வரட்சி வலுத் துறையைப் பாதகமான முறையில் பாதித்தது. நீரேந்து பிரதேசங்களின் குறைந்த மழை வீழ்ச்சி நீர் மின்வலு உருவாக்கத்தைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியது. இதன் விளைவாக, மின்வலுவிற்கான கேள்வியை ஈடுசெய்வதற்கு டீசல், பார எரிபொருள் என்பவற்றின் பெருமளவு நுகர்வுடன் தொடர்புபட்ட வெப்ப மின்வலு உருவாக்கம் இன்றியமையாததாயிற்று. தீவிரமடைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுங் கூடக் குறிப்பிட்ட சில பெற்றோலிய உற்பத்திகளின் நுகர்வு அதிகரிப்பதற்கு உதவின. பெற்றோலிய உற்பத்திகளுக்கான உயர்ந்த கேள்வியினால் தோன்றிய அதிகரித்த பெற்றோலிய இறக்குமதிகள் பன்னாட்டுச் சந்தையில் அதிகரித்த எண்ணெய் விலைகளுடன் சேர்ந்து எண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவு குறிப்பிடத்தக்களவில் உயர்வதற்குக் காரணமாயின.

விறகு, வேளாண்மை எச்சங்கள், கழிவுப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தகமல்லா வலுமூலங்கள் ஒன்று சேர்ந்து 1987 இல் ஏறத்தாழ 44.3 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமான வலுவென மதிப்பிடப்பட்டது. இது 1987 இன் மொத்த வலு வழங்கலில் ஏறத்தாழ 70 சதவீதத்தினைப் பிரதிபலித்தவேளையில் பெற்றோலியம், மின்வலு, திரவப் பெற்றோல் வாயு, சிறிதளவு நிலக்கரி என்பன எஞ்சியவற்றிற்கு வகை கூறின.

1986 யூலையில் பரீட்சார்த்த அடிப்படையில் தொழிற்படத் தொடங்கிய இரந்தெனிகல நீர் மின்வலுச் செயற்றிட்டம் (ஒவ்வொன்றும் 61 மெகவாட்டுக் களைக் கொண்ட 2 அலகுகள்) நீர் மின்வலுவின் நிறுவப்பட்ட இயலளவை 1986 இன் இறுதியிலுள்ள 746.25 மெகாவாட்டுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 868.25 மெகாவாட்டிற்கு அதிகரித்தது. 1986 இல் நிறுவப்பட்ட 6 மெகாவாட் இயலளவைக் கொண்ட புறக்கோட்டையிலுள்ள மின்வலு நிலையம் 1987 யூனில் மீண்டும் தொழிற்படத் தொடங்கியது. எனவே 270 மெகாவாட் வெப்ப மின்வலுவுடன் சேர்ந்து 1987 இறுதியில் மின்வலு உருவாக்கத்தின் மொத்த நிறுவப்பட்ட இயலளவு 1,138.25 மெகாவாட்டிற்கு அதிகரித்தது. எனினும், கொத்மலை நீர் மின்வலு செயற்றிட்டத்தின் (67 மெகாவாட்) ஒரு மின்விசை ஆளியிலும் களனி நீராவி மின்வலு நிலையத்தின் (50 மெகாவாட்) ஒரு மின்விசை ஆளியிலும் பேணல் வேலைகள் நடந்தமையின் காரணமாக மீளாய்விற்குரிய ஆண்டில் அவை தொழிற்படவில்லை.

1987 இல் இலங்கை மின்சபையின் மொத்த வலு உருவாக்கம் 27,076 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக விளங்கி 1986 இல் உருவாக்கப்பட்ட 26,518 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களைவிட 2 சதவீதம் உயர்வானதாக இருந்தது. நீர் மின்வலுப் பொறித் தொகுதிகளை முழு இயலளவில் தொழிற்படுத்துவதற்கு நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் போதுமானதாக இருக்காமையால் பற்றாக்குறை வெப்ப மின்வலு உருவாக்கத்தின்மூலம் ஈடுசெய்யப்பட்டது. இதன் விளைவாக நீர்மின் மூலம் உருவாக்கப்பட்ட மின்வலுவின் சார்பு ரீதியான பங்கு 1986 இன் 99.7 சதவீதத்திலிருந்து 1987 இல் 80.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. வெப்ப மின்வலுவின் உருவாக்கம் பார டீசல், கழிவு எரிபொருள், பார எரிபொருள் என்பனவற்றின் நுகர்வில் அதிகரிப்புக்களை ஏற்படுத்தியதன்

மூலம் 1986 இல் அவற்றின் நுகர்வான 1,618 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 157,463 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இதன் விளைவாக வலு உருவாக்கத்திற்காக இலங்கை மின்சபையால் பயன்படுத்தப்பட்ட எரி பொருளின் செலவு 1986 இன் ரூ. 116 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 11,656 இலட்சத்திற்குக் கணிசமானளவில் அதிகரித்தது. வெப்ப மின்வலு உருவாக்கத்தின் காரணமாக ஏற்பட்ட மேலதிக செலவினை மீளப் பெறும் பொருட்டு இலங்கை மின்சபை 1987 மேயிலிருந்து ''150 அலகுகட்கும் கூடுதலான மின்வலு நுகர்வின் மீது'' 15 சதவீதம் கொண்ட எரிபொருள் சீராக்கக் கட்டணத்தை விதித்தது. இது 1987 செத்தெம்பரிலிருந்து 30 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. வரட்சி நிலைமைகள், வெப்ப மின்வலு உருவாக்கத்தின் உயர்ந்த செலவு என்பனவற்றின் காரணமாக மின்வழங்கலில் காணப்பட்ட இடர்ப்பாடுகளைத் தொடர்ந்து இலங்கை மின்சபை 1987 ஒகத்து 12 ஆம் நாள் முதல் நாடளாவிய மூன்றரை மணிநேர மின்வெட்டை நடைமுறைப்படுத்தியது. எனினும் இம் மின்வெட்டு நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து 1987 ஒற்றோபரில் நிறுத்தப்பட்டது.

மின்வலுவின் மொத்த விற்பனை 1986 இன் 22,323 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களிலிருந்து 1987 இல் 22,490 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களிற்கு 0.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 1978—1986 காலப் பகுதிக்கிடையில் பதிவு செய்யப்பட்ட சராசரி ஆண்டு வளர்ச்சியான 9 சத வீதத்தினைவிடக் குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும். மின்வலு விற்பனையின் மெதுவான வளர்ச்சிக்கு மின்வெட்டும், உள்நாட்டுக் குழப்பங்களின் விளைவாக வலு வழங்கல் தடைப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். எனினும் 1987 காலப்பகுதியின் மின்வலு நுகர்வில் கைத்தொழில்துறை தவிர்ந்த அனைத்து ஏனைய துறைகளும் அதிகரிப்புக்களையே பதிவு செய்தன. மின்வெட்டின் காரணமாக கைத்தொழில் துறை மின் நுகர்வில் முன்னைய ஆண்டினைவிட 5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டில் கைத்தொழில் துறையின் மின்வலு நுகர்வு 8,790 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங்களாக விளங்கி மொத்த மின்வலு விற்பனையில் 39 சதவீதமாக இருந்தது. உள்ளூராட்சி மன்றங்களின் தொகை வடிவிலான கொள்வனவு 5,730 இலட்சம் கிலோவாட் மணித்தியாலங் களாக அல்லது 1987 இன் மொத்த வலு நுகர்வில் 25 சதவீதமாக விளங்கியது. வீட்டு, மற்றும் வர்த்தகத் துறை மொத்த நுகர்வில் முறையே 17 சதவீதத்தை யும், 18 சதவீதத்தையும் நுகர்ந்தவேளையில் மிகுதி சாலை விளக்குகளுக்கும் ஏனைய நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது.

பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெய் விலையின் மேல்நோக்கிய அசைவு குறிப்பிட்ட பெற்றோலிய உற்பத்திகளுக்கான அதிகரித்த கேள்வியுடன் சேர்ந்தமை யின் காரணமாக 1987 இல் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான வெளிநாட்டுச் செலாவணிச் செலவு முன்னைய ஆண்டினைவிடக் குறிப்பிடத்தக்களவு உயர்வான தாக இருந்தது. 1986 இன் மொத்த இறக்குமதியில் 11 சதவீதத்திற்கு வகை கூறிய பெற்றோலியத்தின் மீதான இறக்குமதிச் செலவு 1987 இல் 14 சதவீதத் திற்கு அதிகரித்தது. எண்ணெய் இறக்குமதிச் செலவு ரூபா நியதிகளில் 1986 இன் ரூ. 62,930 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,910 இலட்சம்), 1987 இல் ரூ. 87,160 இலட்சத்திற்கு (சிஎஉ 2,290 இலட்சம்) 39 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 20 சதவீதம்) அதிகரித்தது.

உள்நாட்டுச் சந்தையில் மின்வலு, பெற்றோலிய உற்பத்திகள் மீதான தீர்வை வீதங்கள் மிகைக் கட்டணம் நீங்கலாக 1987 ஆம் ஆண்டு முழுவதும் மாற்றமின்றி யிருந்தன. 1984 ஆம் ஆண்டிலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கிற்கு மாறாக உள்நாட்டுச் சந்தையில் தொகை வடிவிலான அனைத்து பெற்றோலிய உற்பத்தி களுக்குமான கேள்வி 1987 இல் அதிகரித்தது. கேள்வியில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப்

அட்டவணை 1.20

**வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1986 – 1987**

| விடயம் | அலகு | 1986 | 1985க்கு மேலாக சதவீத மாற்றம் | 1937 | 1986க்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| **1. பெற்றோலிய உற்பத்திகள்** | | | | | |
| 1.1 ஏற்றுமதிகள் ... | ரூ. ப. இ. | 2,358.0 | — 39.2 | 2,592.2 | 9.9 |
| | சிஎஉ ப.இ. | 71.7 | — 48.9 | 68.0 | — 5.2 |
| 1.2 இறக்குமதிகள் ... | ரூ. ப. இ. | 6,293.1 | — 42.7 | 8,715.8 | 38.5 |
| | சிஎஉ ப.இ. | 191.3 | — 51.9 | 228.8 | 19.6 |
| 1.3 இறக்குமதி செய்யப்பட்ட தொகை | மெ. தொ. | | | | |
| 1.3.1 மசகெண்ணெய் ... | ,, | 1,638,547 | — 1.1 | 1,778,853 | 8.5 |
| 1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | ,, | 147,445 | — 18.9 | 254,636 | 72.7 |
| 1.3.3 ஏனைய உற்பத்திகள் ... | ,, | 24,845 | 19.6 | 25,738 | 3.6 |
| 1.4 மசகெண்ணெயின் சராசரி விலை ... | ரூ./பீ. ஒ. | 454.26 | — 41.4 | 543.29 | 19.6 |
| | ஐ.அ.டொ./ பீ. ஒ. | 16.26 | — 42·7 | 18.45 | 13.5 |
| 1.5 உள்நாட்டு விற்பனைகள் | மெ. தொ. | | | | |
| 1.5.1 சிறப்புப் பெற்றோல் ... | ,, | 130,624 | 7.4 | 140,402 | 7.5 |
| 1.5.2 தன்னியக்க டீசல் .. | ,, | 488,907 | 0.1 | 497,303 | 1.7 |
| 1.5.3 பார டீசல் ... | ,, | 20,126 | — 14.6 | 131,802 | ** |
| 1.5.4 சிறப்பு டீசல் ... | ,, | 15,871 | 17.1 | 20,558 | 29.5 |
| 1.5.5 மண்ணெண்ணெய் ... | ,, | 154,182 | 0.3 | 155,575 | 0.9 |
| 1.5.6 உலைஎண்ணெய் ... | ,, | 129,753 | — 9.2 | 161,668 | 24.9 |
| 1.6 உள்நாட்டு விலை | ரூ./இலிற்றர் | | | | |
| 1.6.1 சிறப்புப் பெற்றோல் ... | ,, | 13.50 | — | 13.50 | — |
| 1.6.2 தன்னியக்க டீசல் ... | ,, | 8.13 | — | 8.13 | — |
| 1.6.3 பார டீசல் ... | ,, | 7.83 | — | 7.83 | — |
| 1.6.4 சிறப்பு டீசல் ... | ,, | 9.28 | — | 9.28 | — |
| 1.6.5 மண்ணெண்ணெய் ... | ,, | 6.58 | — | 6.58 | — |
| 1.6.6 உலை எண்ணெய் | | | | | |
| —500 செக்கண்ட் ... | ,, | 4.22 | 19.1 | 4.22 | — |
| —800 செக்கண்ட் ... | ,, | 3.87 | 20.5 | 3.87 | — |
| —1000 செக்கண்ட் ... | ,, | 3.72 | 21.2 | 3.72 | — |
| 1.6.7 நிலக்கீல் ... | ரூ./கி.கி. | 7.22 | — | 7.22 | — |
| **2. மின் வலு** | | | | | |
| 2.1 நிறுவப்பட்ட இயலளவு ... | மெ. வா. | 1,010.25 | — 0.6 | 1,138.25 | 12.7 |
| 2.1.1 நீர் மின் ... | ,, | 746.25 | — | 868.25 | 16.3 |
| 2.1.2 வெப்ப மின் ... | ,, | 264.00 | — 2.2 | 270.00 | 2.3 |
| 2.2 உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் | ப.இ.கி.வா.ம | 2,651.8 | 7.6 | 2,707.6 | 2.1 |
| 2.2.1 நீர் மின் | ,, | 2,645.3 | 10.5 | 2,177.5 | — 17.7 |
| 2.2.2 வெப்ப மின் ... | ,, | 6.5 | — 90.6 | 530.1 | *** |
| 2.3 மொத்த விற்பனைகள் ... | ,, | 2,232.3 | 8.3 | 2,249.0* | 0.7 |
| 2.3.1 வீடு ... | ,, | 369.2 | 6.6 | 384.0* | 4.0 |
| 2.3.2 கைத்தொழில் ... | ,, | 925.3 | 8.8 | 879.0* | — 5.0 |
| 2.3.3 வர்த்தகம் ... | ,, | 381.4 | 9.0 | 399.0* | 4.6 |
| 2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ... | ,, | 543.3 | 8.2 | 573.0* | 5.5 |
| 2.3.5 தெரு விளக்கு ... | ,, | 13.1 | 11.0 | 14.0* | 6.9 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சபை

** 6 மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பு

*** 82 மடங்கிற்கும் கூடுதலான அதிகரிப்பு

பொறுப்பாக இருந்த முக்கிய காரணி வெப்ப மின் உருவாக்கத்திற்கான பார டீசல், பார எரிபொருள் என்பவற்றின் பயன்பாட்டில் ஏற்பட்ட அதிகரிப்பே யாகும். எனினும் முன்னைய ஆண்டுகளைப் போன்று பார டீசலுக்கான கைத் தொழில் துறையின் கேள்வி 1986 இன் 19,823 மெற்றிக் தொன்களிலிருந்து 1987 இல் 18,649 மெற்றிக் தொன்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

மின்வெட்டின் காரணமாக ஏற்படும் மின் வலுப் பற்றுக்குறையை ஈடு செய்யக் கைத்தொழில்கள் மேற்கொள்ளும் மாற்று ஒழுங்குகளினால் உலை எண் ணெயின் நுகர்வு 1986 இனைவிட 25 சதவீதத்தினால் அதிகரித்தது. செலவின் தாக்கம் காரணமாகப் பார டீசலின் இடத்திற்கு உலை எண்ணெய் பதிலீடாக இருந்து வருகின்றது. தீவிரமாக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகளின் காரணமாகப் பெருமளவுக்குத் தன்னியக்க டீசல், பெற்றோல் என்பனவற்றிற்கான கேள்வி முறையே 8 சதவீதத்தினாலும், 2 சதவீதத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை மண்ணெண்ணெய்க்கான கேள்வியும் 1987 இல் சிறிதளவால் அதிகரித்தது.

**போக்குவரத்து**

நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளில் நிலவும் குழப்ப நிலைமைகளினால் போக்கு வரத்துத் தொழிற்பாடுகள் உண்மையில் பாதகமான முறையில் பாதிக்கப்பட்ட போதும் 1987 இல் இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபையினால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் பயணிகள் கிலோமீற்றர் நியதிகளில் சிறிதளவால் வளர்ச்சி யுற்றன. எனினும், இலங்கைப் புகைவண்டிப் பகுதியினாலும் தனியார் துறை யினராலும் வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் பின்னடைவினைப் பதிவு செய்தன. பெருமளவுக்கு உயர்ந்த இறக்குமதிச் செலவுகளின் காரணமாகத் தனியார்துறை தமது உந்து ஊர்தித் தொகுதியை அதிகரிக்க முடியவில்லை. இதன் விளைவாகப் பயணிகள் கிலோமீற்றர் நியதிகளில் பயணிகள் சந்தையில் தனியார்துறையின் பங்கு 1987 இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

1986 இன் பிற்பகுதியில் 150 ஓரளவு ஆடம்பர பேருந்துகளை அறிமுகப் படுத்தியதுடன் இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபைகள் திருந்திய பயணிகள் பணிகளை வழங்கக்கூடிய சார்பு ரீதியில் சிறந்த நிலையில் இருந்ததுடன் அவைகளின் பாரக் காரணிகளையும் அதிகரிக்கக் கூடியனவாக இருந்தன. தாழ்ந்த கூரை களையும் குறைந்த இயலளவையும் கொண்ட தனியார் சொகுசு வண்டிகளைப் பயணிகள் போக்குவரத்திலிருந்து தடைசெய்தமையைத் தொடர்ந்து பயணம் செய்யும் பொதுமக்களின் மூலம் இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபையின் பேருந்துகளுக்குப் பெருமளவு ஆதரவு கிடைத்தது. மேலும் சிக்கனமற்ற கிலோ மீற்றர்களை நீக்கியதன்மூலமும் இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபையின் அட்டவணையிடப்பட்ட பணிகள் திருத்தப்பட்டன.

விரிவாக்கமெதுவுமின்றிப் பெருமளவு ஆற்றல், நம்பகத் தன்மை என்பன வற்றின் உதவியுடன் தற்போதுள்ள பயணிகள் பணிகளை ஒருங்குதிரட்டுவதே இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபைகளின் 1987 ஆம் ஆண்டிற்கான கூட்டுக் குறிக்கோளாக இருந்தது. இதன்படி ஊர்திகள் ஓடும் அட்டவணை களிலும், சிக்கனமற்ற வழித் தடங்கள் சிலவற்றை நீக்குவதிலும் அடிக்கடி திருத்தங்கள் செய்யப்பட்டன. பொதுவாக நிதிச் செயலாற்றத்தை முன்னேற்றும் பொருட்டு இலங்கை பிரதேச போக்குவரத்துச் சபைகளின் பல பிரிவுகள் (பொறி யியல் தொகுதி, மருத்துவ நிலையம், மத்திய ஓட்டுநர் கல்வி நிலையம், முகாமை

நிறுவனம், இலங்கை சேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம், வெரகெரவிலும், பொரளையிலும் உள்ள ஏனைய பயிற்சி நிறுவனங்கள்) வர்த்தக ரீதியில் ஆற்றல் மிக்கனவாகும் பொருட்டு அவைகளின் அலுவல்களை முகாமைத்துவம் செய்வதற்காகக் குறிப்பிடத்தக்களவு சுதந்திரத்தையும் பொறுப்பினையும் வழங்கின.

இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளின் தொழிற்பாடுகள் 1987 ஆம் ஆண்டுப் பகுதியில் பின்னடைவினைக் கொண்டிருந்தன. தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் 1986 இன் 3,765 இலட்சத்திலிருந்து 1987 இல் 3,709 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்று 1.5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. நாட்டின் சில பகுதிகளில் நிலவிய குழப்ப நிலைமைகளே தொழிற்பட்ட கிலோ மீற்றர்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தன. இக் குழப்பங்கள் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் அட்டவணையிடப்பட்ட பணிகளைக் கடுமையாகப் பாதித்த வேளையில் மற்றைய சில பகுதிகளில் இடம் பெற்ற குழப்பங்கள் ஊர்தித் தொகுதிக்குக் குறிப்பிடத்தக்க சேதத்தை விளைவித்தன. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இலங்கை பிரதேசப் போக்குவரத்துச் சபைகள் அட்டவணையிடப்பட்ட கிலோமீற்றர்களில் முறையே 28 சதவீதத்தினையும், 32 சதவீதத்தினையும் மட்டுமே தொழிற்படுத்தக்கூடியனவாக இருந்தன. தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் பழமைவாய்ந்த ஊர்தித் தொகுதியினாலும் பாதிக்கப்பட்டதுடன் தற்போதுள்ள ஊர்தித் தொகுதியில் 36 சதவீதம் வீதிப் போக்குவரத்துக்கு உகந்தனவாகவும் இல்லை.

இவ்வாண்டுப் பகுதியில், தற்போதிருக்கும் 7,250 பேருந்துத் தொகுதிக்கு மேலதிகமாக எதுவும் சேர்க்கப்படாததுடன் இவற்றில் 4,750 பேருந்துகள் மட்டுமே வழமையான தொழிற்பாடுகளுக்குக் கிடைக்கக் கூடியதாகவும் இருந்தன. எனினும் இவ்வாண்டுக் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 171 புதிய அடிச் சட்டங்களும், தொழிற்சாலையில் கட்டப்பட்ட 155 பேருந்துகளும் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை கட்டளைகளை அனுப்பியுள்ளமையும் 1988 ஆம் ஆண்டில் மொத்தப் பேருந்துகளின் இருப்பினை அதிகரிக்கும்.

1987 இன் முதலரைப் பகுதியில் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அதன் வருவாயை 1986 இன் அதே காலப்பகுதியினைவிட 14 சதவீதத்தினால் அதிகரிக்கக் கூடியதாயிருந்தது. எனினும் 1987 யூலை குழப்பங்களைத் தொடர்ந்து வந்த தடங்கல்கள் இவ்வாண்டின் முன்னரைப் பகுதியில் அடையப்பெற்ற வருவாய் செயலாற்றத்தைப் பேணுவதனைத் தடை செய்தன. இவ்வாறிருப்பினும் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை பெற்ற வருவாய் 1986 இன் ரூ. 23,320 இலட்சத்திற்கு எதிராக 1987 இல் ரூ. 25,100 இலட்சமாக விளங்கி 7.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதேவேளையில் வடக்கு, கிழக்கு, வடமத்திய, தெற்குப் பகுதிகளின் பிரதேச போக்குவரத்துச்சபைகள் கணிசமான இழப்புக்களைப் பதிவு செய்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை மொத்தத் தொழிற்பாட்டுச் செலவில் 12.3 சதவீதம் வரையிலானதை உதவுதொகையாகத் திறைசேரியிடமிருந்து பெற்றது. இவ்வுதவுதொகை மாணவர்களுக்கான சலுகை அடிப்படையிலான பருவப் பயணச் சீட்டுக்கள், காவல்துறை, பாதுகாப்பு ஆளணியினருக்கான இலவச பயணம், மற்றும் சிக்கனமற்ற வழிகளில் ஏற்பட்ட இழப்புக்கள் என்பனவற்றிற்காக வழங்கப்பட்டது. 1987 இல் உதவுதொகையின் அளவு ரூ. 2,870 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. 1,520 இலட்சம் சிக்கனமற்ற வழிகளின் பணிக்காக வழங்கப்பட்டதாகும்.

1987 இல் பயணிகள் பணிகளில் தனியார்துறையின் பங்களிப்பு கணிச மானளவில் குறைவடைந்தமைக்கு ஊர்திகளின் உயர்ந்த இறக்குமதிச் செலவும், வடக்கு, கிழக்கு, வடமத்திய பிரதேசங்களில் பணிகள் கட்டுப்படுத்தப்பட்டமை யுமே காரணங்களாகும். அத்துடன் நகர தடங்களிலும், நீண்டதூர வழிகளிலும் தாழ்ந்த கூரை, குறைந்த இயலளவு கொண்ட சொகுசு ஊர்திகளைப் பயணிகள் போக்குவரத்திலிருந்து தடைசெய்தமையால் பயணிகள் போக்குவரத்து பொதுத் துறையை நோக்கித் திரும்பியது. தனியார்துறையில் தொழிற்பாட்டிலுள்ள ஊர்தி களின் தொகை அடிக்கடி ஏற்பட்ட திருத்தல், பேணல் வேலைகளினால் ஓட முடியாமல் இருந்தமையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதன் விளைவாகத் தனியார்துறைக்கு தனியார் பேருந்துப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை 1986 இன் 10,370 இலிருந்து 9,170 இற்கு வீழ்ச்சியடைந்தது. எடுத்துக்காட்டாக 1987 இல் புதிய பேருந்துகளுக்கு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்கள் 1986 இன் 3,205 உடனும் 1985 இன் 4,128 உடனும் ஒப்பிடுகையில் 2,257 ஆகவே விளங்கியது. உந்து ஊர்திகள் போக்குவரத்துத் திணைக்களத்தின் பதிவுகளும் தனியார் பேருந்துகளின் புதிய பதிவுகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சி ஏற்பட்டமையைக் காட்டுகின்றது. 1986 இன் 1,781 உடன் ஒப்பிடுகையில் 1987 இல் அத்தகைய பதிவுகள் 1,062 ஆக மட்டுமே இருந்தன.

தனியார் பேருந்துப் போக்குவரத்து அமைச்சு தனியார்துறைக்குச் சாதகமான கொடுகடன் வசதிகளை வழங்குவதன்மூலம் சந்தையில் உயர்ந்த கூரையையுடைய பேருந்துகளின் கிடைப்பனவை அதிகரிப்பதற்குப் பல நடவடிக்கைகளை எடுத் துள்ளது. முதல் நடவடிக்கையாகத் தனியார் பேருந்துப் போக்குவரத்து அமைச்சு இந்தியாவிலிருந்து 2,000 தனியார் சொகுசு வண்டிகளை இறக்குமதி செய்வதற் கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதுடன் இவை 1988 இல் தனியார்துறைக்குக் கிடைக்கச் செய்யப்படும்.

முன்னைய ஆண்டினைப்போன்றே, 80 சதவீதத்திற்கும் கூடுதலான பொருள் போக்குவரத்து தனியார்துறை வீதிப் போக்குவரத்தாளர்களாலேயே கையாளப் பட்டது. குழப்ப நிலைமைகளினால் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மையின் காரணமாக இலங்கை புகைவண்டிப் பகுதி உள்ளிட்ட அரசதுறை நாட்டின் வழமையான போக்குவரத்துப் பணிகளைப் பேணுவதில் இடர்ப்பாடுகளை எதிர் கொண்டது. பொருள் போக்குவரத்து ஊர்திகளின் புதிய பதிவுகளின் எண்ணிக்கை 1986 இன் 3,350 இலிருந்து 1987 இல் 2,919 இற்கு 13 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் நடவடிக்கைகளும் அரசியல் குழப்பங் களினால் 1987 இல் பாதகமாகப் பாதிக்கப்பட்டன. பாதகமான நிலைகள் காணப் பட்டபோதிலும் புகைவண்டிக் கிலோமீற்றர்கள் 1986 இல் 79 இலட்சத்திற் கெதிராக 1987 இல் மொத்தம் 81 இலட்சமாக அமைந்து இவ்வாண்டில் 2.5 சதவீத வளர்ச்சியைப் பிரதிபலித்தது. எனினும் பயணிகள் கிலோமீற்றர் 1986 இன் 19,720 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்து 18,820 இலட்சமாக விளங்கியது. சரக்குத் தொன் கிலோமீற்றரும் முந்திய ஆண்டினைவிட 2.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.21

**போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள் 1986 – 1987**

| விடயம் | அலகு | 1986 | 1985இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1987 (அ) | 1986 இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் ... | எண்ணிக்கைகள் | | | | |
| 1.1 இ. . போ. சபையின் பேருந்துகள் ... | ,, | 254 | 167.4 | 51 | — 80.0 |
| 1.2 தனியார் சொகுசு வண்டிகள் ... | ,, | 1,781 | — 49.9 | 1,052 | — 40.4 |
| 1.3 தனியார் வாடகை வண்டிகள் ... | ,, | 7,297 | 20.1 | 7,590 | 4.0 |
| 1.4 இரட்டை நோக்கங்களுக்கான வண்டிகள் | ,, | 3,892 | 247.1 | 3,234 | — 16.9 |
| 1.5 உந்து ஈருருளிகள் ... | ,, | 26,593 | 16.7 | 25,996 | — 2.2 |
| 1.6 சரக்குகள் கொண்டு செல்வதற்கான சரக்கு வண்டிகளும் ஏனைய ஊர்திகளும் | ,, | 3,350 | — 53.6 | 2,917 | — 12.9 |
| 2. இ.போ.சபை | | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 376.5 | 3.5 | 370.9 | — 1.5 |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 15,148.8 | 0.8 | 16,027.1 | 5.8 |
| 2.3 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 2,332.2 | — 2.2 | 2,510.3 | 7.6 |
| 2.4 மொத்தச் செலவு ... | ரூ. ப. இ. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 2.5 மிகை+/குறை— ... | ரூ. ப. இ. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 3. இலங்கை புகைவண்டிப் பகுதி | | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 7.9 | — 7.1 | 8.1 | 2.5 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 1,972.0 | — 1.5 | 1,881.9 | — 4.6 |
| 3.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் ... | ப. இ. | 203.6 | — 12.2 | 198.4 | — 2.6 |
| 3.4 மொத்த வருவாய் ... | ரூ. ப. இ. | 482.0 | 3.8 | 422.5 | — 12.3 |
| 3.5 மொத்தச் செலவு ... | ரூ. ப. இ. | 771.2 | 45.5 | 823.6 | 6.8 |
| 3.6 மிகை+/குறை— ... | ரூ. ப.இ. | — 289.2 | 342.2 | - 401.1 | 38.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை போக்குவரத்துச் சபை.
இலங்கை புகைவண்டிப் பகுதி.
உந்து ஊர்திகள் திணைக்களம்,

கொள்கலன் போக்குவரத்துப் பணி 1987 இல் திருப்திகரமாகச் செயற்பட்டது. கொள்கலன் போக்குவரத்தில் ஈடுபடுவதற்காகத் தனியார்துறையின் பங்களிப்புடன் ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கூட்டு நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இலங்கைப் புகைவண்டிப் பகுதி அரசதுறையில் பொருட்கள் போக்குவரத்துத் தேவையினைப் போதிய அளவு சமாளிக்கக்கூடிய நிலையில் இருந்தது.

**வீடமைப்பு**

ஐக்கிய நாடுகள் 1987 ஆம் ஆண்டினை வீடற்றோருக்கான பன்னாட்டு வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது. வீடமைப்புத் துறையில் அடையப்பட்ட முக்கிய சாதனை (அ) வீடற்றோருக்கான பன்னாட்டு வீடமைப்புத் தேசிய நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டம். (ஆ) கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தினையும், நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தினையும் சமூக மட்டத்தில் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒருங்கிணைத்தல் என்பவற்றை நடைமுறைப்படுத்தியமையாகும். 1987 இல் பத்து இலட்சம் வீடுகளை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான வீடமைப்பில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. இவ்வாண்டில் ஒரு இலட்சம் வீடுகள் அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வெளிநின்ற வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன. பரவலான தேர்வுத் தொகுப்பினை வழங்குவதன் மூலம் பத்து இலட்சம் வீடமைக்கும்

நிகழ்ச்சித் திட்டமானது அது 1984 இல் தொடங்கப்பட்டதிலிருந்து அரச, தனியார் துறைகள் இரண்டிலும் தங்குமிட வசதிகளுடன் கூடிய வீடுகளின் தொகையினை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

பத்து இலட்சம் வீடமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் (1984—1989) பெருந்தொகையான குடும்பங்களுக்கு (பத்து இலட்சம் அல்லது அதற்குக் கூடிய—குடும்பங்களுக்கு'') வீடமைத்துக் கொடுப்பதாகும். ''அரசின் ஆகக் குறைவான தலையீடும் வீடமைக்கும் சமூகத்தினரின் அதிகூடிய பங்களிப்பும்'' என்பதே இதன் உத்தியாகும். இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்ப் புதிய வீடுகளை அமைப்பதற்கும், ஏற்கனவேயுள்ள வீடுகளைத் தரமுயர்த்துவதற்கும், வீடமைப்புக் கடனுடன் தொடர்புடைய ஏனைய தேவைகளை ஈடுசெய்வதற்கும் கடன் வழங்கப்பட்டது. வறியோரின் புகலிட நிலைமைகளை முன்னேற்றுவதனை நோக்கமாகக் கொண்ட பத்து இலட்சம் வீடுகளை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டின் முக்கிய நடவடிக்கையாக வீடற்றோருக்கான பன்னூட்டு வீடமைப்பு ஆண்டு தேசிய நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டம் அமைந்தது. 21 உறுப்பினரை உள்ளடக்கிய அமைச்சுக்களிடையேயான வழிப்படுத்தும் குழுவினால் தனியார்துறையின் பங்களிப்புடன் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்பட்டது.

பெருந்தொகையான குடித்தொகைக்கு, சிறப்பாகக் குறைந்த வருமான மட்டங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களைக் கூடிய அளவில் மீளப் பெறுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டுக் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டமும் நகர்ப்புற வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டமும் சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டன இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் நகர, கிராமப் பிரதேசங்களிலுள்ள 14,269 குடும்பங்களுக்கு ரூ. 650 இலட்சம் வழங்கப்பட்டது.

பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய துணை நிகழ்ச்சித் திட்டங்களாகக் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், முக்கிய குடியமர்த்தல் திட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், தனியார்துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பன விளங்கின.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்ட 10 இலட்சம் வீடமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய அரச துறை நிகழ்ச்சித் திட்டமாகக் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் விளங்கியது. 1987 இல் 36,700 குடும்பங்களுக்கு வீடமைப்பதென இலக்கிடப் பட்டது. இதில் 36,502 குடும்பங்கள் கடன் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து பயனடைந்தனர். கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் புகலிட நடவடிக்கைகளுக்காக 1987 இல் வழங்கப்பட்ட கடன்கள் 1986 இல் வழங்கப் பட்ட ரூ. 2,560 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1,940 இலட்சமாக விளங்கின. பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1986 இன் 38,614 உடன் ஒப்பிடுகையில் 42,423 ஆக அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முந்திய ஆண்டுகளின்போது தொடங்கப்பட்ட வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்டதாகும். இவ்வாறாக 1987 இன் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை அதன் இலக்காகிய 173,219 உடன் ஒப்பிடுகையில் 137,005 ஆக விளங்கியது.

அட்டவணை 1.22

## பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் (1984 – 1987)(அ)

| விடயம் | வீடமைப்பு இலக்கு (குடும்பங்களின் எண்ணிக்கை) | அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | | உள்ளமைப்பு வீடமைப்பு அலகுகள்/ முற்றுப்பெற்றவை | | செலவு (ரூ. ப. இலட்சம்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வீடுகளின் கட்டுமானம் | உள்ளமைப்பு | வீடுகளின் கட்டுமானம் | உள்ளமைப்பு (குடும்பங்களின் எண்ணிக்கை) | திட்டமிடப்பட்டவை | உண்மையானவை |
| கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் | | | | | | | |
| 1984 ... | 39,984 | 43,213 | — | 16,092 | — | 190.0 | 189.8 |
| 1985 ... | 40,679 | 42,077 | — | 39,896 | — | 255.3 | 218.7 |
| 1986 ... | 55,856 | 60,337 | — | 38,614 | — | 270.9 | 255.8 |
| 1987 ... | 36,700 | 36,502* | — | 42,423* | — | 215.0 | 194.5* |
| நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம்** | | | | | | | |
| 1985 ... | — | 7,584 | 14,788 | 2,314 | 14,788 | 150.3 | 104.3 |
| 1986 ... | 12,792 | 10,419 | 6,539 | 6,978 | 6,539 | 123.0 | 91.1 |
| 1987 ... | 10,828 | 7,291* | 7,013* | 7,778* | 7,013* | 115.0 | 98.2* |

மூலம்: தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை

(*) தற்காலிகமானவை.

** நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் 1985 இல் பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.

(அ) தரவுகள் கிராம வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டத்தினதும் நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டத்தினதும் செயலாற்றத்தினைக் குறிக்கின்றன. எனினும் பெருந்தோட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம், மகாவலி வீடமைப்பு துணை நிகழ்ச்சித்திட்டம், முக்கிய குடியேற்றதிட்ட துணை நிகழ்ச்சித்திட்டம் என்பன மீதான தரவுகளை உள்ளடக்கவில்லை

கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து வேறுபட்ட நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டமானது (1) கட்டடத்திற்கான இடத்தினையும் பணிகளையும் முன்னேற்றுவதனையும் (2) சேரிகளையும் சுற்றுப் புறங்களையும் தரமுயர்த்துவதனையும் உள்ளடக்கியிருந்தது. இந்நிகழ்ச்சித் திட்டத் தின் கீழ் இவ்வாண்டில் 10,828 குடும்பங்களுக்குக் கடன் வழங்குவதென்ற இலக்குடன் ஒப்பிடுகையில் 7,291 குடும்பங்களுக்குக் கடன் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை யினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெருந்தோட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபையினாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தினாலும் கூட்டாகச் செயற்படுத்தப்படுகின்றது. ஆய்வுக்குரிய ஆண்டில் பெருந்தோட்டத் துறையின் வீடமைப்புக் கொள்கையானது பெருந்தோட்டங் களுக்குள்ளும் சுற்றுப்புறத்திலும் தனிப்பட்ட வீடுகளை அமைக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டது. இதன் விளைவாகப் பெருந்தோட்ட வீடமைப்புக் கொள்கை நாட்டின் தேசிய வீடமைப்புக் கொள்கையுடன் ஒத்ததாக அமைந்தது. தற்காலிகத் தரவின்படி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை 1987 இல் 835 புதிய இரட்டை வீடுகளைப் பூர்த்திசெய்ததுடன் 1,486 தொடர் அறைகளை யும் தரமுயர்த்தியது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் இதே வகையான வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தினைக் கொண்டிருந்தது. இதன் கீழ் 171 இரட்டை வீடமைப்புக் கூறுகளும் 1,315 கூறுகளைத் தரமுயர்த் தலும் முற்றுப்பெற்றன.

மகாவலி வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கல்நேவ, தம்புத்தேகம, நொச்சியாகம, முறை பி, சி, ஜி என்பவற்றில் 2,806 வீடுகள் கட்டப்பட்டன. 1987 இல் 5,911 மலசல கூடங்களுக்கும், 6,037 கிணறுகளுக்கும் வசதிகள் வழங்கப்பட்டன. காணி ஆணையாளர் திணைக்களமும் இங்கினிமிட்டிய, முத்துக்கண்டிய, கிருண்டிஓய, வெலிஓய ஆகிய குடியமர்த்தல் திட்டங்களில் வீடுகளை அமைப்பதற்கு மீளப்பெறும் அடிப்படையில் தொடர்ந்து கடன்களை வழங்கியது. பொருட்களின் செலவினை ஈடுசெய்வதற்காக ஒவ்வொரு குடும்பத்திற் கும் ரூ. 11,500 வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 137 புதிய வீடுகள் கட்டப்பட்டன.

தற்காலிகத் தரவுகளின்படி அரசதுறை வீடமைப்பின் மீதான மொத்தச் செலவு ரூ. 4,240 இலட்சமாக அமைந்தது. இதில் இவ்வாண்டில் ரூ. 2,930 இலட்சம் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்திலும், நகர வீடமைப் புத் துணை நிகழ்ச்சித் திட்டத்திலும் செலவிடப்பட்டன.

1987 இல் கொழும்பு மாநகர சபை 1986 இல் ஒப்புதலளிக்கப்பட்ட 410 வதிவிடக் கட்டடங்களுடன் ஒப்பிடுகையில் 596 கட்டடங்களின் நிருமாணத் திற்கு ஒப்புதல் வழங்கியது. ஒப்புதலளிக்கப்பட்ட கட்டடங்களினது வகைகளின் பகுப்பாய்வு ஒப்பீட்டு அடிப்படையில் அட்டவணை 1.23 இல் தரப்பட்டுள்ளது.

தனிப்பட்டவர்களுக்கும், வீடமைப்பு அபிவிருத்தியாளர்களுக்கும் வீடமைப்பிற்கு நிதியிடும் முக்கிய மூலமாக அரச ஈட்டு முதலீட்டு வங்கி தொடர்ந்தும் விளங்கியது. வீடமைப்பு நோக்கங்களுக்காக 1987 இல் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் 1986 இல் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ. 6,650 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 6,290 இலட்சமாக அமைந்தன. வீடுகளை நிருமாணிப்பதற்கும் கொள்வனவு செய்வதற்குமான கடன்களுக்கு விதிக்கப்பட்ட வட்டி வீதம் 1987 இல் ஆண்டுக்கு 8 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டமைந்தது. அரச ஈட்டு முதலீட்டு வங்கி—றெப்பியா சடன் திட்டத்தின் மூலம் இவ்வாண்டில் வீடுகளைப் புனரமைப்பதற்கு மொத்தமாக ரூ. 30 இலட்சம் வழங்கியது.

1954 இன் எண் 37 கொண்ட தேசிய வீடமைப்பு சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட கட்டடச் சங்கமாகிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் இவ்வாண்டில் அதன் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடர்ந்து மேற்கொண்டது. வழங்கப்பட்ட கடன்கள் 1986 இன் ரூ. 740 இலட்சத்திலிருந்து 1987 இல் ரூ. 310 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. கடன்கள் மீதான வட்டி வீதம் 1987 செத்தெம்பரில் ஆண்டுக்கு 9.5—22.0 சதவீதத்திலிருந்து 11.5—22.0 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டு ஆண்டு இறுதி வரை மாற்றமின்றி விளங்கியது.

அட்டவணை 1.23

**கொழும்பு மாநகர சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்***

**1986-1987**

| விடயம் | 1986 | 1985ற்கு மேலாக சதவீத மாற்றம் | 1987 | 1986ற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. புதிய வதிவிடக் கட்டடங்கள் ... | 410 | — 21.3 | 596 | 45.4 |
| 1.1 வீடுகள் ... | 224 | — 32.5 | 246 | 9.8 |
| 1.2 தொடர் மாடிகள் ... | 186 | — 1.6 | 350 | 88.2 |
| 2. வர்த்தகக் கட்டடங்கள் ... | 82 | 100.0 | 65 | — 20.7 |
| 3. கைத்தொழில் கட்டடங்கள் ... | 10 | 400.0 | 5 | — 50.0 |
| 4. பள்ளிக்கூட கட்டடங்கள் ... | 3 | 50.0 | 3 | — |
| 5. இணைப்புக்களும் திருத்தங்களும் ... | 410 | 116.9 | 382 | — 6.8 |
| 6. ஏனைய கட்டடங்கள் ... | 99 | 67.8 | 70 | — 29.3 |
| மொத்தம் ... | 1,014 | 24.6 | 1,121 | 10.6 |

மூலம்: கொழும்பு மாநகர சபை

*அரச, கூட்டுத்தாபனக் கட்டட வரைபடங்கள் நீங்கலாக

**நகர அபிவிருத்தி**

நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக 1987 இல் நகர அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளின் மட்டம் தொடர்ந்து குறைவாகவே விளங்கியது. எனினும், நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை முன்பு ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் சிலவற்றைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. உறுகொடவத்தை உணவுக் களஞ்சியங்கள், பேலியகொடையில் உள்ள ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டத்தின் கீழான காணி மீள் அபிவிருத்தி, பம்பலப்பிட்டி புகையிரத நிலைய வீதியில் உள்ள கடைத்தொகுதி என்பன பூர்த்தியாக்கப்பட்டன. இவ்வாண்டில் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் முக்கிய ஈடுபாடு கல்ஸ்டொப்பில் உள்ள மேல் நீதிமன்றத் தொகுதியிலேயே காணப்பட்டது. கொழும்புக்கு வெளியே நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் இரத்தினபுரியிலும், கல்முனையிலும் உள்ள செயலகத் தொகுதியும் கதிர்காமத்திலுள்ள புதிய நகர அபிவிருத்திச் செயற்றிட்டமும் ஆகும்.

அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்மீது ஏற்பட்ட மொத்தச் செலவு முந்திய ஆண்டின் ரூ. 5,290 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 3,700 இலட்சமாக விளங்கியது. ஏறக்குறைய 70 சதவீதமான செலவு (ரூ. 2,590 இலட்சம்) வாடிக்கையாளரின் பேரில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களில் ஏற்பட்டது. காணி வங்கிக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் மீது ரூ. 480 இலட்சம் கொண்ட தொகை செலவிடப்பட்டது.

நகர வீடமைப்புக் கட்டுமானம் தொடர்பாகக் குறைந்த வருமான வகுப்பைச் சார்ந்த வதிவோருக்காகத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 1986 இன் ரூ. 910 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 980 இலட்சத்தினைச் செலவிட்டது. நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1987 இல் மொத்தமாக 7,778 வீடுகள் பூர்த்தியாக்கப்பட்டன.

**வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும்**

1987 இல் வீதிகளும் புகைவண்டிப் பாதைகளும் தொடர்பான நடவடிக்கைகள் நாட்டின் சில பகுதிகளில் நிலவிய அரசியல் சூழப்பங்களினால் பாதிக்கப்பட்டன. எனினும் வீதி அபிவிருத்தி மேலாண்மைச் சபை வீதி அமைப்பினை 66 கிலோமீற்றரினால் விரிவடையச் செய்தது. மேலும் 2,860 கிலோமீற்றர்களுக்கு இவ்வாண்டில் மணல் இடப்பட்டது. உலக வங்கியின் உதவியின் கீழ் 1987 இல் ஆறு பாலங்கள் பூர்த்தியாக்கப்பட்டன. அதேவேளை 1987 இல் பெருந்தெருக்கள் அமைச்சினால் பேணப்பட்ட வீதி அமைப்பு 1986 இன் 25,571 கிலோமீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 25,504 கிலோமீற்றர்களாக விளங்கியது.

இவ்வாண்டில் வீதிப் பேணலில் ரூ. 2,540 இலட்சம் செலவிடப்பட்டது. மேலும் வீதியின் நிருமாணம்மீது 1986 இன் ரூ. 2,140 இலட்சத்திற்கெதிராக ரூ. 3,840 இலட்சம் செலவிடப்பட்டது.

முந்திய ஆண்டுகளைப் போன்று புகையிரதப் பாதைகளின் கிலோமீற்றர் தூரம் 1987 இல் மாற்றமின்றி 1944 கிலோமீற்றர்களாக விளங்கியது. எனினும் சபுகஸ்கந்த பாதை இன்னும் பாவிக்கப்படாவிடினும் அது இவ்வாண்டில் கொணுவல வரை நிருமாணிக்கப்பட்டது. மருதானை—ருகம மூன்றாவது புகையிரதப் பாதையின் நிருமாணத்தில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது.

**தொலைத் தொடர்பூட்டல்**

1987 இல் யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் உள்ள ஆளி நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டமையினால் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் தொலைத் தொடர்புப் பணிகள் தகர்க்கப்பட்டன. ஆண்டின் பின் அரைப் பகுதியில் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் தொலைத் தொடர்பு வலையமைப்பில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தின. எனவே, ஏற்கனவே யுள்ள இயலளவினை விரிவாக்குவதற்கும் ஏற்கனவேயுள்ள வீதியமைப்பினை முன் னேற்றித் தரமுயர்த்துவதற்கும் மட்டுமன்றி மீள் நன்னிலைப்படுத்தல் வேலை களுக்கும் அதிகரித்த மூலதனச் செலவினைச் செலவிடவேண்டியிருந்தது.

தொலைத் தொடர்பு முதன்மைத் திட்டத்தின்படி 1982 இல் ஆரம்பிக்கப் பட்ட பல செயற்றிட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டதன் மூலம் பெருந்தொகையான மாகாணப் பிரதேசங்களுக்கு வாடிக்கையாளர் நேரடிச் சுழற்சி வசதிகள் வழங்கப் பட்டன. இரண்டாந்தர மாவட்ட ஆளி நிலையங்களுடன் தொடர்புடைய 18 பின்தங்கிய வாடிக்கையாளர் கூறுகளை நிறுவியதுடன் மாவட்ட ஆளி நிலையங்களின் இயலளவு (அநுராதபுரம், பண்டாரவளை, காலி, கேகாலை, குருநாகல், மாத்தளை, இரத்தினபுரி) பின்தங்கிய பிரதேசங்களுக்கு நேரடிச் சுழற்சி வசதிகளை வழங்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. இதன் விளைவாக மாவட்ட நிலையங்களின் தொழிற்ப டும் இயலளவு 1,662 தொலைபேசிகளுக்கு விரிவடைந்தது. பாணந்துறையில் உள்ள குறுக்கு தொடர் இணைப்பு 390 தொலைபேசிகளினால் அதிகரித்தது. இவ்வாண்டில் குருநாகலிலும், அநுராதபுரத்திலும் உள்ள எண்முறை இணைப்புக்கள் முறையே 62 இனாலும், 48 இனாலும் அதிகரித்தன.

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம்**

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் மூன்று முதன்மைக் கூறுகளான விக்டோரியா, கொத்மலை, மதுறுஓயா, இரந்தெனிகல ஆகிய முதன்மைச் செயற்றிட்டங்கள், கீழ் நீரோட்ட பொறியியல் மற்றும் நீர்ப்பாசன வேலைகள், குடியேற்றமும் வேளாண்மை உற்பத்தியும் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய செயற்றிட்டங்களில் விக்டோரியா, கொத்மலை, இரந்தெனிகல, மதுறுஓயாஎன்பன ஏற்கனவே முடிவடைந்துள்ளன. 1987 இல் முறைகள் பி,சி,ஜி இல் பண்ணைக் குடும்பங்களின் குடியிருப்புக்கள் மீதான எஞ்சிய வேலைகள், நீர்ப்பாசன வசதிகளுக்கும் உள்ளார்ந்த அமைப்பு வசதிகளுக்குமான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1987 இறுதிவரை இச்செயற்றிட்டங்கள் மீது ஏற்பட்ட மொத்த மூலதனச் செலவினம் ரூ. 424,880 இலட்சமாகும். இதில் ரூ. 44,170 இலட்சம் அல்லது 10 சதவீதம் 1987 இல் செலவிடப்பட்டது.

1987 இன் இறுதிவரை விக்டோரியா செயற்றிட்டத்தின் மீது ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூ. 90,440 இலட்சமாக அமைந்ததுடன் இதில் ரூ. 10,500 இலட்சம் இவ்வாண்டுக் காலத்தில் செலவிடப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் மொத்த மின்வலு உருவாக்கம் 457 கிலோவாட் மணித்தியாலங்களாக இருந்தது.

அட்டவணை 1.24

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் - செலவு மதிப்பீடுகள்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செயற்றிட்டம் | 1987 இற்கான வரவு செலவுத்திட்ட செலவினம் | | | 1987க்கான உண்மைச் செலவினம் (அ) | 1987 இறுதி வரையான ஒன்று சேர்ந்த செலவினம் (அ) |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்குகள் | துணை ஒதுக்குகள் | மொத்தம் | | |
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் ... | 190 | 635 | 825 | 1,050 | 9,044 |
| 2. கொத்மலே நீர்த்தேக்கம் ... | 169 | — | 169 | 779 | 9,548 |
| 3. இரந்தெனிகல நீர்த்தேக்கம் ... | 342 | 224 | 566 | 628 | 5,741 |
| 4. மாதுறுஓயாவும் கால்வாயும் ... | — | — | — | — | 2,645 |
| 5. மினிப்பே அணைக்கட்டு மாற்று வடிகால் கால்வாய் ... | 4 | — | 4 | 2 | 1,246 |
| 6. நீர்ப்பாசனமுறை 'பி' ... | 841 | — | 841 | 590 | 5,415 |
| 7. நீர்ப்பாசனமுறை 'சி' ... | 1,050 | 93 | 1,143 | 1,039 | 4,343 |
| 8. நீர்ப்பாசன முறை 'ஜி' ... | 92 | — | 92 | 82 | 394 |
| 9. நிலை I ... | — | — | — | — | 529 |
| 10. நிலை II ... | 33 | — | 33 | 71 | 2,387 |
| 11. பேணல் ... | 288 | — | 288 | 321 | 674 |
| 12. ஏனையவைகள் ... | 344 | — | 344 | 176 | 1,196 |
| மொத்தம் .. | 3,353(ஆ) | 952 | 4,305 | 4,738 | 43,162 |

மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை

(அ) தற்காலிகமானவை.

(ஆ) வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளிலும் பார்க்க 11 சதவீதம் குறைவானதாகும்.

1987 இறுதியில் கொத்மலைச் செயற்றிட்டத்தின் மீதான மொத்தச் செலவு ரூ. 95,480 இலட்சமாகும். இதில் ரூ. 7,790 இலட்சம் மட்டுமே 1987 இல் செலவிடப்பட்டது. இது சுரங்கத் திருத்தலின்மீது செலவிடப்பட்ட ரூ. 4,130 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது. இத்தொகையில் ரூ. 3,730 இலட்சத்தினை இலங்கை மின் சபை நிதியிட்டது. கொத்மலை சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1987 இல் கொத்மலை, சங்கிலிப்பாலம் ஆகிய புதிய நகரங்களில் குழாய் நீரைப் பெறும் வேலைகள், நலத்துறை மற்றும், கல்விப் பணிகள், புதிய வீதிகள் ஏனைய சமூக உள்ளமைப்பு வசதிகள் என்பனவற்றின் வேலைகள் நடைபெற்றன. இவ்வாண்டில் 6 மின்வலுத் திட்டங்கள், பல வீதிகள், நீர் வழங்கல் திட்டங்கள் என்பன முற்றுப் பெற்றன.

இரந்தெனிகல நீர்த்தேக்கச் செயற்றிட்டத்தின்மீது 1987 இறுதிவரை செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 57,410 இலட்சமாகும். 1987 இல் இரந்தெனிகல செயற்றிட்டத்தினுல் உருவாக்கப்பட்ட மொத்த மின்வலு 200 கிலோ வாட் மணித்தியாலங்களாகும். இவ்வாண்டில் சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கீர்த்திபண்டாரபுர புதிய நகரத்தின் மின்னூட்டல் திட்டத்தின் மீதான வேலைகள், வீதிகளை முன்னேற்றுதல், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பரீட்சித்தல் என்பன நடைபெற்றன.

இவ்வாண்டுக் காலத்தில் கீழ் நீரோட்ட அபிவிருத்தி வேலைகளின்மீது குறிப்பிடத்தக்களவு தொகை செலவிடப்பட்டது. 1987 இல் முறை 'பி', முறை 'சி'யின் அபிவிருத்தி மீதான செலவினம் முறையே ரூ. 5,900 இலட்சமாகவும், ரூ. 10,390 இலட்சமாகவும் விளங்கின. 1987 இறுதிவரை இவ்விரு முறைகளின் மீதும் ஏற்பட்ட மொத்தச் செலவு முறையே ரூ. 54,150 இலட்சமாகவும், ரூ. 43,430 இலட்சமாகவும் விளங்கின.

இவ்வாண்டுக் காலத்தில் ஏற்கனவே நீர்ப்பாசன மற்றும் உள்ளார்ந்த அமைப்புக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை அடைந்துள்ள பிரதேசங்களின் அபிவிருத்தி முதலீட்டு நடவடிக்கைகளை மகாவலி அபிவிருத்தி அமைச்சு தொடர்ந்தும் வலியுறுத்தியது. மகாவலிப் பிரதேசத்தில் வியாபார முயற்சிகளை நிறுவுவதற்கு முயற்சியாளர்களுக்கு முதலீட்டுப் பணிகளைப் பரந்தளவில் வழங்குவதற்காக 1987 இல் மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபையில் தொழில்நிலை, முதலீட்டு, தொழில் முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டது. 1987 இல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலப்புப் பயிர்ச் செய்கைகள், கால்நடைப் பண்ணை, வேளாண்மைப் பதனிடல், விதை உற்பத்தி என்பனவற்றில் ஈடுபடும் பெருந் தோட்டங்களை உள்ளடக்கிய 19 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

தற்காலிகத் தரவுகளின்படி மகாவலி ஆளுமைப் பகுதியில் 1986/87 பெரும் போகத்தில் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட மொத்த நிலப்பரப்பு 44,344 எக்டேயர்களாக விளங்கி முன்னைய ஆண்டின் இதே பருவகாலத்தினைவிட 9 சதவீதங் கொண்டதொரு அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வதிகரிப்பு பெருமளவுக்கு முறை 'பி' இன் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவில் ஏற்பட்ட உயர்வின் விளைவாகும். மாறாக, 1987 சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு முறை 'எச்' இல் பயிரிடப்பட்ட பரப்பளவு குறைவடைந்தமையின் காரணமாக 31,160 எக்டேயர்களுக்கு 12 சதவீதத்தினுல் அல்லது 4,218 எக்டேயர்களினுல் வீழ்ச்சியடைந்தது.

## அட்டவணை 1.25

## மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாக பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

எக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1983/84 | சிறு போகம் 1984 | மொத்தம் 1984 | பெரும் போகம் 1984/85 | சிறு போகம் 1985 | மொத்தம் 1985 | பெரும் போகம் 1985/86 | சிறு போகம் 1986 | மொத்தம் 1986 | பெரும் போகம் 1986/87 (அ) | பெரும் போகம் 1987 (அ) | மொத்தம் 1987 (அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முறை 'எச்' ... ... | 23,620 | 19,990 | 43,610 | 23,309 | 18,319 | 41,628 | 24,298 | 21,225 | 45,523 | 24,965 | 13,058 | 38,023 |
| நெல் ... ... | 22,514 | 14,292 | 36,806 | 22,957 | 9,709 | 32,666 | 23,449 | 8,983 | 32,432 | 23,317 | 5,933 | 29,250 |
| ஏனைய பயிர்கள் ... ... | 1,106 | 5,698 | 6,804 | 352 | 8,610 | 8,962 | 849 | 12,242 | 13,091 | 1,648 | 7,125 | 8,773 |
| முறை 'பி' ... ... | 1,749 | 1,438 | 3,187 | 2,535 | 2,246 | 4,781 | 3,851 | 3,554 | 7,405 | 5,961 | 5,805 | 11,766 |
| நெல் ... ... | 1,749 | 1,438 | 3,187 | 2,472 | 2,061 | 4,533 | 3,686 | 3,463 | 7,149 | 5,120 | 5,479 | 10,599 |
| ஏனைய பயிர்கள் ... ... | — | — | — | 63 | 185 | 248 | 165 | 91 | 256 | 841 | 326 | 1,167 |
| முறை 'சி' ... ... | 7,140 | 3,609 | 10,749 | 7,545 | 4,857 | 12,402 | 9,358 | 7,868 | 17,226 | 10,139 | 9,588 | 19,727 |
| நெல் ... ... | 5,352 | 3,609 | 8,961 | 6,086 | 4,827 | 10,913 | 7,945 | 7,782 | 15,727 | 9,057 | 9,480 | 18,537 |
| ஏனைய பயிர்கள் ... ... | 1,788 | — | 1,788 | 1,459 | 30 | 1,489 | 1,413 | 86 | 1,499 | 1,082 | 108 | 1,190 |
| முறை 'ஜி' ... ... | 2,351 | 2,023 | 4,374 | 3,258 | 2,106 | 5,364 | 3,315 | 2,731 | 6,046 | 3,279 | 2,709 | 5,988 |
| நெல் ... ... | 1,975 | 1,405 | 3,380 | 2,941 | 1,198 | 4,139 | 3,153 | 1,423 | 4,576 | 3,220 | 1,176 | 4,396 |
| ஏனைய பயிர்கள் ... ... | 376 | 618 | 994 | 317 | 908 | 1,225 | 162 | 1,308 | 1,470 | 59 | 1,533 | 1,592 |
| மொத்தம் ... ... | 34,860 | 27,060 | 61,920 | 36,647 | 27,528 | 64,175 | 40,822 | 35,378 | 76,200 | 44,344 | 31,160 | 75,504 |

மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

(அ) தற்காலிகமானவை

1987 இன் பயிர்ச்செய்கையாண்டில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் நெல் 83 சதவீதத்திற்கு வகை கூறியது. பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் நெற்செய்கையின் கீழான பரப்பு 92 சதவீதமாகவும், சிறுபோகத்தில் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பில் 71 சதவீதமாகவும் இருந்தது. இப்பயிர்ச்செய்கையாண்டில் முறை 'பி' இலும், முறை 'சி' யிலும் நெற்செய்கை யின் கீழான பரப்பு முறையே 48 சதவீதத்தினாலும், 18 சதவீதத்தினாலும் அதிகரித்தவேளையில் முறை 'எச்', முறை 'ஜீ' என்பவற்றின் நெற்செய்கையின் கீழுள்ள நிலப்பரப்பு முறையே 10 சதவீதத்தினாலும், 4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

1987 இன் பயிர்ச்செய்கையாண்டில் மகாவலிப் பிரதேசத்தின் மொத்த நெல் உற்பத்தி 283,246 மெற்றிக் தொன்களாக அல்லது 1987 இன் மொத்த நெல் உற்பத்தியில் 13 சதவீதமாக இருந்தது. 'எச்' பிரதேசம் 129,995 மெற்றிக் தொன்களுக்கு அல்லது மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மொத்த உற்பத்தியில் ஏறத்தாள அரைப்பங்கிற்கு வகை கூறியது. இது 1986 இன் உற்பத்தியைவிட 13 சதவீதம் உயர்வானதாகும். நாடு முழுவதற்குமான நெல் உற்பத்தியில் 'எச்' பிரதேசத்தின் சார்பு ரீதியான பங்கும் 1986 இன் 4 சத வீதத்திலிருந்து 1987 இல் 6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1987 இல் மகாவலிப் பிரதேசத்தில் மீன்பிடி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் விரிவாக்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் முறைகள் 'எச்', 'சி', 'ஜீ' என்பவற்றில் ஏற்கனவே ஏறத்தாள 50 குளங்கள் நிறுவப் பட்டுள்ளன. 'எச்', 'பி', 'சி' முறைகளுக்கு உதவும்பொருட்டுத் தம்புலுஓயா விலும், மாதுறுஓயாவிலும் மீன் இனப்பெருக்க, செய்முறை விளக்க நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1987 இறுதிவரை முறை 'எச்' இல் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 28,899 ஆகும். முறை 'சி' இல் இவ்வாண்டில் குடியேற்றப் பட்ட 1,407 குடும்பங்களுடன் இம்முறையில் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 1987 இறுதியில் 13,821 ஆகியது. முறை 'பி' இல் இவ்வாண்டில் குடியேற்றப்பட்ட 793 குடும்பங்களுடன் சேர்த்துக் குடியமர்த்தப் பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 10,710 ஐ அடைந்தவேளையில் முறை 'ஜீ' இல் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 1987 இறுதியில் 3,604 ஆகியது.

**ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி**

மகாவலி செயற்றிட்டத்திற்கு வெளியே வேளாண்மை அபிவிருத்திச் செயல் முறையில் முக்கிய பங்கினை வகிக்கும் நீர்ப்பாசன அபிவிருத்தி புதிய நீர்ப்பாசனச் செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமான வேலைகள், ஏற்கனவேயுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களின் புத்தாக்கம் மற்றும் திருந்திய முகாமைத்துவம், சிறு அளவிலான நீர்த்தேக்கங்களினதும் அணைக்கட்டுக்களினதும் மீளமைப்பும் புத் தாக்கமும் என்பனவற்றினை உள்ளடக்கியிருந்தது.

கிருண்டிஓயா நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்றிட்டத்தின் கட்டம் 1 இன் மீதான கட்டுமான வேலைகளின் குறிப்பிடத்தக்க பங்கு 1987 ஆம் ஆண்டுப் பகுதியில் பூர்த்தியாக்கப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் கீழ்நீரோட்ட நீர்ப்பாசன பகிர்ந்தளிப்பு முறையின் பெரும்பங்கு முற்றுப்பெற்றுவிட்டதன் காரணமாக லுகுணுவெகற நீர்த்தேக்கத்திலிருந்து டெபரவேவா, திஸ்சவேவ, பன்னேகமுவ, வீரவில, யோடகந்திய என்னும் ஐந்து முக்கிய குளங்களுக்கு நீர் வழங்கப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் கட்டம் I இன் கீழ் 4,200 எக்டேயர்கள் புதிய நிலங்களுக்கும், ஏற்கனவேயுள்ள 4,600 எக்டேயர்கள் நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1987 இறுதி வரை கட்டம் 1 இன் கீழ் ஏறத்தாள 3,780 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. 1987 இறுதியில் இச்செயற்றிட்டத்தின் கட்டம் 1 தொடர்பான மொத்தச் செலவு ரூ. 15,980 இலட்சமாக விளங்கியது.

கிருண்டிஓயா நீர்ப்பாசனக் குடியேற்றத் திட்டத்தின் கட்டம் 11;1987 இல் தொடங்கியது. இக்கட்டம் 4,100 எக்டேயர் புதிய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டம் 11 இன் மொத்தச் செலவு ரூ. 9,450 இலட்சங்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வெள்ளப் பாதுகாப்பு அரண், ஏற்கனவேயுள்ள 2,575 எக்டேயர் நிலப்பரப்பு 500 எக்டேயர் புதிய நிலம் என்பனவற்றைப் பாதுகாப்பதற்கானதொரு நீரிறைக்கும் நிலையம் ஆகியவற்றின் கட்டுமானத்தை முக்கியமாகக் கொண்ட நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தின் நிலை 11 ; 1987 இல் செயற்படுத்தப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் இச்செயற்றிட்டத்தின் மீதான மொத்தச் செலவினம் ரூ. 5,850 இலட்சமாக விளங்கியவேளையில் 1987 இறுதி வரையான செலவினம் ரூ. 8,390 இலட்சமாக இருந்தது.

இவ்வாண்டில் நீர்ப்பாசனத் திணைக்களம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை முன்னேற்றுவதுடன் தொடர்பான அதன் வேலைகளைத் தொடர்ந்தது. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் உதவப்பட்ட கிராம நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டம் ஏறத்தாள 1,200 கிராம நீர்த்தேக்கங்களையும் அணைக்கட்டுக்களையும் நவீனமாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1987 இல் 227 திட்டங்களின் மீதான வேலை தொடங்கியுள்ளதுடன் இவ்வாண்டில் 197 திட்டங்கள் முற்றுப்பெற்றன. 1987 இறுதிவரை இச்செயற்றிட்டங்களின் மீதான மொத்தச் செலவினம் ரூ. 6,560 இலட்சமாக இருந்தது.

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சார்பு ரீதியில் பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகளிலுள்ள மக்களின் சமூக பொருளாதார நிலமைகளை முன்னேற்றுவதற்கான தேவை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளமையினால் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் கிராமிய அபிவிருத்திக்கு மூலவளங்களை ஒதுக்குவதற்கு உயர்ந்தளவு முன்னுரிமை வழங்கியுள்ளது. 1986 இல் 13 மாவட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1987 இல் களுத்துறை, கண்டி மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது.

களுத்துறை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் பின்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 1987 யூலையில் தொழிற்படத் தொடங்கியது. 3 ஆண்டுக் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள களுத்துறை நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 2,450 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. இதில் ஏறத்தாள 85 சதவீதம் பின்லாந்து அரசாங்கத்தினால் நிதியிடப்படும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம் தொடக்கத்தில் கிராமிய மின்னூட்டல், நலத்துறை, தொலைத் தொடர்பூட்டல், நீர் வழங்கல், காட்டுத்தொழில் என்பனவற்றின்மீது முக்கிய கவனம் செலுத்தியது. 1987 இல் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளின்மீது ஏறத்தாள ரூ. 70 இலட்சம் செலவிடப்பட்டது. கண்டி மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் சேர்மன் கூட்டாட்சிக் குடியரசினால் நிதியிடப்பட்டது. இச்செயற்றிட்டம் கிராமியக் குடித்தொகையின் சமூக–பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதில் பொதுவாகக் கவனம் செலுத்துவதுடன் குறிப்பாக மாவட்டத்திலுள்ள மிகப் பின்னடைந்த தொகுதியினரின் மீது அதிக கவனம் செலுத்துவதாகவும் இருந்தது.

1987 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மொத்தச் செலவினம் 1986 இன் ரூ. 4,410 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 4,460 இலட்சமாக விளங்கியது. 1987 இறுதிவரை எல்லாச் செயற்றிட்டங்களின்மீதுமான ஒன்று சேர்ந்த செலவு 1986, 1987 காலப்பகுதியில் ஏற்பட்ட செலவுகளுடன் அட்டவணை 1.26 இல் காட்டப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள செயற்றிட்டங்கள் தவிர்ந்த ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 1987 இல் திருப்திகரமான செயற்பாட்டினைக் காட்டின. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் உள்நாட்டுக் குழப்ப நிலைமைகளின் காரணமாக அங்குள்ள ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. இதே காரணத்திற்காக கனடா அரசினால் நிதியிடப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடங்குவது மேலும் பிற்போடப்பட்டுள்ளது. கம்பகா, காலி, அனுராதபுர மாவட்டங்களுக்கான எடுத்துரைக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் மீதான தொடக்க வேலைகள் 1987 இல் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அட்டவணை 1.26

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1986–1987

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாவட்டம் (அ) | | வெளிநாட்டு உதவி மூலங்கள் | மதிப்பிடப்பட்ட செலவு | | | இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு | | 1986-ஆம் ஆண்டின் செலவு | 1987-ஆம் ஆண்டின் செலவு (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள் | உள்நாடு | மொத்தம் | 1986 முடிவில் உள்ளபடி | 1987 முடிவில் உள்ளபடி (ஆ) | | |
| 1. குருநாகல் | (1979) ... | உலக வங்கி | 430 | 215 | 645 | 645 | 648 | 48 | 3 |
| 2. மாத்தறை | (1979) ... | சீடா (சுவீடன்) | 383 | 42 | 425 | 119 | 153 | 25 | 34 |
| 3. அம்பாந்தோட்டை | (1979) ... | நொராட்( நோர்வே) | 686 | 14 | 700 | 310 | 382 | 54 | 72 |
| 4. நுவரெலியா | (1980) ... | நெதர்லாந்து | 449 | 56 | 505 | 186 | 228 | 48 | 42 |
| 5. மாத்தளை | (1981) ... | உலக வங்கி | 305 | 143 | 448 | 231 | 274 | 39 | 43 |
| 6. புத்தளம் | (1981) ... | உலக வங்கி | 398 | 187 | 585 | 431 | 489 | 74 | 58 |
| 7. பதுளை | (1982) ... | வே. அ. ப. நி. | 384 | 84 | 468 | 202 | 277 | 77 | 75 |
| 8. வவுனியா | (1984) ... | உலக வங்கி | 246 | 133 | 379 | 63 | 63.6 | 8 | 0.6 |
| 9. மன்னார் | (1984) ... | உலக வங்கி | 220 | 118 | 338 | 53 | 54 | 7 | 1 |
| 10. இரத்தினபுரி | (1984) ... | நெதர்லாந்து | 366 | 9 | 375 | 52 | 81 | 30 | 29 |
| 11. மொனறாகலை | (1984) ... | நொராட் | 392 | 8 | 400 | 48 | 103 | 19 | 55 |
| 12. முல்லைத்தீவு | (1985) ... | நெதர்லாந்து | 353 | 7 | 360 | 5 | 6 | 1 | 1 |
| 13. கேகாலை | (1986) ... | வே. அ. ப. நி. | 262 | 147 | 409 | 10 | 35 | 10 | 25 |
| 14. களுத்துறை | (1987) ... | பின்லாந்து ப.அ.அ. | 213 | 32 | 245 | 0.3 | 7.3 | 0.3 | 7 |
| 15. கண்டி | (1987) ... | சே. கூ. குடியரசு | 56 | 6 | 62 | 0.5 | 0.7 | 0.5 | 0.2 |

(அ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு.